மாலை மணி

Regd. No. 5458

Phone: 4502

காலைப் பதிப்பு

விலை அரை அணா

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன்

மாலை 4 | சென்னை 16-7-54 | மணி 26

திக்கெட்டும் வெற்றி முரசு கொட்டிய தியாகத் திருநாள்

அறுவரை அறப்போர்க் களத்தில் அர்ப்பணித்தோம்

ஆணவம் அழிந்தது; அறம் வென்றது

சென்னையில் மதியழகன் முழக்கம்

'ஜூலை பதினைந்து' திராவிடரின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள். திராவிடரின் தீரத்தையும், வீரத்தையும், தியாக உணர்வையும், தன்னலங்கருதாத உள்ளத்தினையும் உலகிற்கு அறிவித்த நாள்.

ஜூலை பதினைந்து! திராவிட முன்னேற்றக் கழகத்தின் சக்தியையும், கண்ணியத்தையும், கடமை உணர்வையும் அறப்போரிடும் அஞ்சாத நெஞ்சுரத்தினையும் வெளிப்படுத்திய நாள்!

திராவிடரின் தன்மானத்தைக் காத்திட மறத்திராவிடர் துடித்தெழுந்த நாள்! தியாகங்கள் பல செய்து, செத்து மடிந்தும், செந்தமிழர் நெறியை நிலைநிறுத்திய நாள்! அண்ணாவின் ஆணை கேட்டுத் தமிழகமே தலைவணங்கித் தன்மானமுரசு கொட்டிய நாள், ஜூலை பதினைந்து!

சென்னையில் நடந்த வெற்றிவிழா கூட்டத்தில் மாணவர் தலைவரும் தி. மு. க. துணைச் செயலாளருமான தோழர் மதியழகன் அவர்கள் மேற்கண்டபடி குறிப்பிட்டுவிட்டு மேலும் பேசியதாவது:—

தோழர்களே! தாய்மார்களே! கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் தி. மு. கழகம் நடத்திய மும்முனைப்போராட்டம் குறித்த இந்த வெற்றிவிழாப் பொதுக் கூட்டத்திற்கு என்னைத் தலைமை தாங்கும்படி பணித்தமைக்கு எனது மகிழ்ச்சி கலந்த நன்றியறிதலை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த ஆண்டு ஜூலை பதினைந்தாம் நாள், அறிஞர் அண்ணாவும், நண்பர்கள் நெடுஞ்செழியன், சம்பத், நடராஜன், நான் ஆகிய ஐவரும் இதே நேரத்தில் ஆச்சாரியாரின் அடக்குமுறைக்கு ஆளாகிச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருட்டறையில் கிடந்தோம். அன்று இன்று போல் உங்கள் மலர்ந்த முகங்களை நான் காண முடியவில்லை. நண்பர்களின் புன்முறுவலைப் பார்க்க முடியாதவனாக இருந்தேன். வானத்து வெண்ணிலவு என் கண்களுக்கு அப்பால் இருந்தது. ஆனால் இன்று, அதே நேரத்தில் இந்த வெற்றி விழாவிற்குத் தலைமை தாங்குவது குறித்துப் பெரிதும் பூரிப்படைகிறேன்.

நாம் சென்றஆண்டு நடத்திய மும்முனைப்போராட்டம் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. கடந்த ஜூலை பதினைந்தாம் தேதி திராவிடமெங்கும் நடந்த அறப்போரின் வெற்றி குறித்து நாம் உண்மையிலேயே பெருமையும் பூரிப்புமடையவேண்டியவர்களாகிறோம்.

ஜூலை பதினைந்தாம் தேதி திராவிடத்தின் எழுச்சிக் கட்

(4ம் பக்கம் பார்க்க)

சென்னையில் அடக்குமுறை தர்பார்!

9-வது வட்ட கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்

இரண்டு தோழர்களுக்கு ஒருவார சிறை

சென்னை, ஜூலை. 15—

எழுகிணறு (9-வது வட்டம்) திராவிட முன்னேற்றக்கழகக் கிளையைச் சேர்ந்த தோழர்கள் விநாயகம், ராமச்சந்திரன் ஆகிய இருவரும் நேற்று இரவு போலீசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

ஜூலை, 15—வெற்றி விழாவிற்கான ஏற்பாடுகளைத் தோழர்கள் செய்து கொண்டிருக்கும் பொழுதே, கைது செய்யப்பட்டனர். வெற்றிவிழா சம்பந்தமான விளம்பர ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர். அந்நேரத்தில் போலீசார் இருவரையும் கைதுசெய்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்ததாக வழக்கு தொடர்ந்தனர்.

இன்று காலை ஜார்ஜ்டவுன் கௌரவமாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி தோழர்களிருவருக்கும் நருபக்குபத்துரூபாய் அபராதம் விதித்து, அபராதத்தொகை கட்டத்தவறினால் ஒரு வாரம் சிறை என்று தீர்ப்பு கூறினார்.

தோழர்கள் அபராதம் செலுத்த மறுத்து, சிறைத்தண்டனையை ஏற்றனர்.

சிறை செல்லும் தோழர்களை கூடியிருந்த கழகத் தோழர்கள் உற்சாகத்துடன் வாழ்த்தி வழியனுப்பிவைத்தனர். தண்டனையேற்ற தோழர்கள் முகமலர்ச்சியுடன் சிறை சென்றனர்.

சென்னையில் 'ஜூலை-15' வெற்றி விழா!

மாபெரும் ஊர்வலம்! மகத்தான கூட்டம்!

சென்னை, ஜூலை 16—

நேற்று பிற்பகல் சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் இராமசாமி அவர்கள் தலைமையில், இராயபுரம் தி. மு. க. தலைமை நிலையத்திலிருந்து 'ஜூலை 15' வெற்றி விழா ஊர்வலம் புறப்பட்டது. கிளைக்கழகக் கொடிகள் ஊர்வலத்தில வானளாவப்பறந்தன. கொடிகளுடன் கூடிய சைக்கிள்களும் சென்றன. ஊர்வலம் மாலை கான்ரான்ஸ்மித் மைதானத்தை அடைந்தது வழியெங்கும் மக்கள் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற பேரொலியை வான்முட்ட முழக்கமிட்டபடி வந்தனர்.

கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில் தி. மு. க. ஆதரவில் 'ஜூலை 15' வெற்றி விழாக்கூட்டம் நடந்தது. மாணவர் தலைவர் மதியழகன் அவர்கள் தலைமை தாங்கினர்.

கடந்த ஆண்டு ஜூலை போராட்டங்களை விளக்கியும் அதில் ஈடுபட்டுச்சிறைசென்ற தோழர்கட்கும், உயர்நீத்த உத்தமர்கட்கும் வீரவணக்கம் செலுத்தி தோழர்கள் அரங்கண்ணல், தியாகராயர் கல்லூரி மாணவத் தோழர் பெரியதுரை, நடிகமணி டி. வி. நாராயணசாமி, அ. பொன்னம்பலம் ஆகியோர் பேசினர்கள்.

மாகி விடுதலை அடையும்

இருதினங்களில் அதிகார மாற்றம்

ஏகாதிபதியத்தின் பிடி தளர்கிறது!

கோழிக்கோடு, ஜூலை. 15—

பிரஞ்சிந்தியப் பகுதிகளில் ஒன்றான மாகி இன்னும் இருதினங்களில் விடுதலையடையும் என்று உத்தியோகப் பூர்வமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அதிகார மாற்றம் இரண்டு தினங்களுக்குள் ஏற்படும். மாகி மக்கள் சபையால் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்டிங் அட்மினிஸ்ட்ரேட்டரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும்.

மானிட இன்பம் பறிமுதல்

ஆபாச விஷயங்கள் அடங்கியிருந்ததாம்

சென்னை, ஜூலை. 15—

மானிட இன்பம் என்னும் பத்திரிகையில், மே, ஜூன் இதழ்களில், ஆபாச விஷயங்கள் இருந்ததால், சென்னை சர்க்கார் பறிமுதல் செய்துள்ளது. மேற்கண்ட இதழ்களின் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளன

மாலைமணி

சென்னை 16—7—54

மந்திரியாரின் ‘மத’ போதனை!

தசரதனுக்குக் குழந்தை இல்லை. அந்த இல்லாதக் குறையைப் போக்கிக்கொள்ள, கலைக்கோட்டு முனிவரை அழைத்து அசுவமேதம் இயற்றி, புத்திரகாமேஷ்டியும் செய்ய, அதனின்று ஒரு பூதம் தோன்றியது! அந்தப் பூதம் ஒரு கிண்ணம் நிறைய பாயசம் கொண்டுவந்து தர, அதை முனிவரின் சொற்படி கௌசலை, சுமித்திரை, கைகேசி ஆகிய தம் மூன்று மனைவியருக்கும் தசரதன் பகிர்ந்து கொடுக்க, அதைப்பருகிய தேவியர் கர்ப்பம் தரித்து, குழந்தைகளைப் பெற்றனர்!

பூதம் தந்த பாயசத்தால், புவியாள்வோனின் மனைவியர் குழந்தைகளைப் பெற்றனர்! தசரதன் குழந்தை வேண்டும் என்று கடவுளை வேண்டி யாகம் செய்தான்! ஆகையால் அவனது தொடர்பே இல்லாமல், பாயசத்தின் மகிமையினால் மனைவியர் குழந்தைகளைப் பெற்றனர்! இது இராமாயணம்!

பார்க்கவ புராணத்திலே குழந்தை பிறக்கும் வேறொரு அதிசய சம்பவமிருக்கிறது! தசரதனும் அவனது மனைவியரும் நீண்டகாலமாகக் குழந்தை வேண்டுமென்று ஏங்கினர், யாகமும் செய்தனர்! குழந்தையும் பிறந்தது! ஆனால் பார்க்கவ புராணத்தில் ஒரு பெண்ணிற்குக் குழந்தை பிறக்கிறது—அவளோ அல்லது அவளது கணவனோ குழந்தை வேண்டுமென்று கடவுளைக் கைகூப்பித் தொழுது வரம் கேட்காமலேயே! கேளுங்கள் அதை!

அபிசித் என்னும் ஓர் அரசனுக்கு, குணவதி என்ற அழகிய மனைவியிருந்தாள். அந்த அழகரசி ஒரு நாள் ஆற்றங்கரையோரமாக உலவிவரச் சென்றாள்!

பூலோகத்துக் காட்சிகளைக்கண்டு விட்டு, அதே ஆற்றங்கரைமீது வேறொரு பக்கத்தில் வந்து உட்கார்ந்தனர்—பிரமனும் சரஸ்வதியும்! பூலோகக்காட்சிகள் தந்த போதை! ஆற்றங்கரையில் வீசிய குளிர்ச்சியான காற்று! இவை பிரமனை ஏதோ செய்தன. சரஸ்வதியைத் திரும்பிப்பார்த்தான், தாகங் கொண்ட தன் கணவனை, அந்தத் தங்கமேனியாள் குறும்போடு பார்த்தச் சிரித்தபடி, சிறிது தூரமாக நகர்ந்து உட்கார்ந்தாள்! ஆற்றங் கரையையே, அந்தப் புரமாக்கிக்கொள்ள பிரமன் துடித்தான்!

“கண்டவர் வருமிடத்திலே காதல் விளையாட்டா? கை கொட்டிச் சிரிப்பார்களே, வெளியில் தெரிந்தால்! வேண்டாம கண்ணாளா, வேண்டாம்! சித்தத்தை அடக்கிக் கொள்ளுங்கள், சிறிது நேரத்தில் பிரமலோகம் சேர்ந்து விடலாம்! விரைவில் புறப்படுங்கள்! அங்கே தங்கள் விருப்பத்திற்கு விருந்தாகிறேன்! என்றாள் கலைவாணி,/ அவன் பிடியிலிருந்து தப்பியோடியபடி! அவனுக்கோ பதைப்பு—அவளுக்கோ பயம்!... ....காமவசப்பட்ட பிரமனின் வீரியம், ஆற்றில் விழுந்தது!

ஆற்றங் கரையில் உலவிக் கொண்டிருந்த குணவதி என்ற அரசிக்கு, அந்த நேரமாகப் பார்த்து தாகம் அதிகமாகி விட்டது பாவம்! ஆகவே அந்தத் தையல ஆற்றில் இறங்கி, கைகளால் நீரை அள்ளிப்பருகினாள், ஆற்றுநீரில் மிதந்து கொண்டுவந்த பிரமனின வீரியம், அந்த அழகியின் வாயின் வழியாக வயிற்றினுள் சென்று விட்டது! கருவுற்றாள்—கணன் என்னும் குமரனைப் பெற்றாள்!

கல்போல் கணவன் இருந்தாலும், அவனது அணைப்போ இணைப்போ இன்றி, கடவுளின் கடாட்சத்தால் குழந்தைகளைப் பெற்ற புண்ணியவதிகள் ஏராளமாகப் புராணங்களிலே காணக்கிடக்கிறார்கள்!

புராணங்களிலே வரும் குணவதிகளுக்குக் குழந்தை பிறந்தது கடவுளின் கிருபையால் என்றால் நம்பலாம்! ஏனென்றால் கடவுளினால்தான் எதையும் செய்ய முடியுமே! ஆனால் இன்று உலகிலே அப்படி எங்கேயாகிலும் நடந்ததாகக் கேட்டிருக்கிறோமா? இல்லையே!

மனைவி காந்தாவை கிராமத்தில் விட்டு விட்டு, கந்தன் மட்டும் பர்மா செல்கிறான். ஐந்தாண்டுகள் அங்கே இருந்து விட்டு ஊருக்குத் திரும்புகிறான். காந்தாவின கையில் ஆறுமாதக் குழந்தை சிரித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறான்?

“காந்தா! இது யார் குழந்தை?” மனைவியைப் பார்த்து இப்படிக் கந்தன் கேட்கிறான்

“ஏன், நம் குழந்தைதான்!”

“நம் குழந்தையா? நான் உன்னை விட்டுச் சென்று ஐந்தாண்டுகளாகின்றன, நமக்கு எப்படியடிக் குழந்தை பிறக்கும்?

“நீங்கள் இங்கே இல்லாவிட்டால் என்ன, கடவுளின் கிருபை இருந்தது—பிறந்தது!”

“கடவுளின் கிருபையாலா—கள்ளக் காதலனின் தயவினாலா அடியே வஞ்சகி!............”

“என்னை நம்புங்கள்! நான் ஒரு பாபமும் அறியேன்! ஒரு சாமியார் வந்தார்! தந்தார், ஒரு மாம்பழத்தை! அதைப் புசித்தேன்—கர்ப்பம் தரித்தேன்!”

அப்படி கூறிய காந்தாவை மார்போடு அணைத்து, “ஆகா கடவுளின் கிருபையே கிருபை!” என்று கந்தன் கூறுவானா? அல்லது கந்தனின் நிலையில் வேறெவனாவது இருந்தால்தான்—சொல்வானா? ஓடிப் போடி விபசாரியே! என்று எட்டி உதைக்கவும், குடியைக் கெடுத்தாயே குணங் கெட்டவளே” என்று கத்தியைத் திட்டவும் செய்வானே அன்றி, தானில்லாமலேயே மனைவிக்குக் குழந்தை பிறந்ததைக் கண்டு எந்தக் கணவனும் கடவுளின் கிருபை என்று சும்மா இருந்துவிடமாட்டான்! ஏனென்றால் குழந்தை பிறப்பது எப்படி, என்ற உடல் கூற்று விவரம் அனைவருக்கும் தெரியும்! அதனால்தான் காந்தாவின் குழந்தையைக் கந்தன் ஏற்றுக் கொள்ள மறுத்தான்!

குழந்தை பிறப்பது எப்படி? இதை விவரித்துக் காட்ட சில படங்களும், பலப்பல நூல்களும் இருக்கின்றன! அந்தப் படங்களையோ, ஏடுகளையோ, பார்ப்போர் படிப்போர், தெரிந்து கொள்வார்கள், கரு எப்படி உற்பத்தியாகிறது—வளர்கிறது—வெளிவருகிறது என்ற விவரங்களை!

மர்மமாக நடைபெறும் எல்லாம் புரியாதவை—மகேஸ்வரனின் செய்கை—என்று ஒத்துக் கொண்டது, அந்தக் காலம்! ஆனால் விஞ்ஞானம் வளர்ந்து விட்டிருக்கும் இந்தக் காலத்தில் ஆராய்ச்சியின் மூலம் இன்னென்ன காரியங்கள் இப்படித்தான் நடைபெறும் என்று வரையறுத்து வைத்தாகி விட்டது!

மஞ்சள் வர்ணத்தையும் நீல வர்ணத்தையும் கூட்டிக் குழைத்தால, பச்சை வர்ணம் உண்டாகும்! இது இயற்கை—கடவுளின் செயல் அல்ல!

அதைப் போல ஆணும் பெண்ணும், சேர்ந்தால், குழந்தை பிறக்கிறது! இது இயற்கை நியதி, இறைவனின் கடாட்சமல்ல!

இதைத் தெரிந்து கொள்ளாமல், குழந்தை பிறப்பது கடவுளினால்தான் என்று கூறுபவரைப் பற்றி, உலகம் என்ன எண்ணும்? புராணக் காலத்தில் வாழ வேண்டியவர், விஞ்ஞானக காலத்தில் வாழ்கிறாரே என்று இரக்கப்படுமல்லவா?

“கடவுள் கிடையாது என்று சில கூட்டத்தார் பொது மேடைகளில் பேசுகிறார்கள்! அப்படி இருந்தால், குழந்தை எப்படி பிறக்கிறது?

இதுயாரோ ஒரு படிக்காத பட்டிக்காட்டானின் கேள்வி என்று எண்ணிவிடாதீர், நம் கல்விமந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்களின் கேள்வி! ஏன் சிரிக்கிறீர்கள், பாபம், சிரிக்காதீர்கள்! விஞ்ஞானமே தெரியாத ஒருவர் மந்திரியாக, அதுவும் கல்வி மந்திரியாக இருக்கிறாரே என்று எண்ணுகிறீர்களா? என்னசெய்வது?

தசரதன் மனைவியர் கருவுற்ற விதத்தையும், குணவதி குழந்தைபெற்ற முறையையுமே புராணங்களில் படித்துவிட்டு—ஓகோ, குழந்தை பிறப்பது என்றால் ஆண்டவனின் அருள் வேண்டும் போலிருக்கிறது—என்ற முடிவிற்கா வந்துவிட்டிருக்கிறார், நமது கல்வி மந்திரி? இல்லாவிட்டால், உலகத்தில எவ்வளவோ விஞ்ஞான செய்திகளைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்க, புராணச் சேற்றை அள்ளிப் பூசிக் கொள்ளுங்கள் என்று மக்களுக்கு அடிக்கடி உபதேசம் செய்வாரா?

விழுப்புரத்தை அடுத்த கோனூரில் நடைபெற்ற இராமகிருஷ்ண பாடசாலைத் திறப்பு விழாவில் தோழர் சுப்பிரமணியம் பேசியிருக்கிறார் மாணவர்கள் நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில் கடவுளின பெருமையைப் பேச எண்ணியிருக்கிறார்! பேசட்டும்! எந்த இடம், அங்கே என்ன பேசுவது என்று புரிந்துபேச வேண்டாமா? சின்னஞ் சிறு பாடசாலை மாணவர்களைப் பார்த்தா குழந்தை எப்படி பிறக்கிறது என்று கேட்பது? கேள்வியே புரியாமல் திகைக்கும் அந்தச் சிறுவர்களிடத்தில், ‘கடவுளினால்தான் குழந்தை பிறக்கிறது!” என்று கூறி, கடவுள் பக்தியை வளர்க்கப் பார்க்கும் அவர் போக்கை, எதற்கு ஒப்பிடுவது?

அந்தக் கேள்வியை அவர் கேட்கட்டும், வைத்தியக் கல்லூரி மாணவ மாணவிகளைப்பார்த்து! கடவுளின் கிருபையினால்தான் பிறக்கிறது என்ற விளக்கமும் தரட்டும்; பிறகு அங்கே என்ன நேரிடுகிறது என்று பார்க்கட்டும்!

கடவுள் இல்லாமல் சூரியன் எப்படித் தோன்றுகிறான் என்று கேட்கும் படிக்காதவனைப்போல அல்லவா, கடவுள் கிடையாது என்றால் குழந்தை எப்படிப்பிறக்கிறது என்று கல்வி மந்திரி கேட்கிறார்! படித்த மற்ற பாடங்களை எல்லாம் மறந்து விட்டு, புராணத்தை மட்டும் நினைவு வைத்திருக்கும் மந்திரியாரே, திரும்பவும் ஆவலக் எல்லிஸ் நூல்களை ஒரு முறை படித்துப்பாரும்—தெரியும் குழந்தை பிறப்பது எப்படி என்று! உம் போக்கைக்கண்டு நாடுசிரிக்கிறது! இனியாகிலும் பகுத்தறிவுவாதிகளைத் தாக்கிப் பேசுவதாக எண்ணிக்கொண்டு, அறிவுக்குப் பொருந்தாத வார்த்தைகளைக் கக்காதீர்!

சென்றோம்-வென்றோம்-வாகைசூடினோம்!

வந்தவன் வாழ-சொந்தநாட்டான் சோற்றுக்கு அலைவதா?

வடமொழி-வடவர் வரலாறு நம்மை வாழவைக்காது!

பேராசிரியர் அன்பழகன் பேச்சு

(நேற்றைய தொடர்ச்சி)

இம்மாநாட்டின் துவக்கத்தில் நேற்று மாலை திருக்குறள் 'உரை வளம்' திரட்டித் தந்த புலவர் தண்டபாணியாருக்கு ஓர் பாராட்டு நிகழ்ந்தது. தமிழ்ப் பணி செய்பவர்களைப் பாராட்டும் மனப்பான்மை மேலும் மேலும் பெருக வேண்டும். ஆண்டு தோறும் நடைபெறும் மாநாடுகளில்-தமிழ்ப் பணியாற்றும் புலவர்களில் சிறப்பான ஓரிருவருக்குப் பாராட்டு நிகழ்த்திட நாம் முன்வரவேண்டும்,

ஆனால் இந்த நல்லுணர்ச்சி தோன்றுவதற்கானகாரணத்தை நாம் மறந்துவிடக்கூடாது கடந்த கால நிகழ்ச்சிகளே அதற்குக் காரணம். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர்—அப்பொழுது நிகழ்ந்த ஆச்சாரியாரின் காங்கிரஸ் ஆட்சியில் 'இந்தி' கட்டாயமாகப் புகுத்தப்பட்டது நம் நாட்டில் அதைக் கண்டு கொதித்தெழுந்த நமது வழிகாட்டிகளான மறைமலையடிகள், கா. சு. பிள்ளை, பாரதியார் முதலான பலர் இந்தியை எதிர்த்து முழங்கியதாலேயே பெரியார் ஈ. வே. ரா தலைமையில் ஒரு பெரும் போராட்டம் நடைபெற்றது. முதியரும், இளைஞரும் தாய்களோடு சேய்களும் சிறை சென்றனர் அம்மொழிப் போரில் சிறையிலே பிணமாயினர் இரு வீரர்கள், தாலமுத்து நடராசன் என்ற பெயருடைய செம்மல்கள். அவ்விருவரது உயிர் ஆயிரக்கணக்கானவர்களது தியாகந்தான்—இன்று நம்மையெல்லாம் தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடும், ஒற்றுமைப்படும் இயல்புடையவர்களாக மட்டும் அல்ல—தமிழரின் தகுதியையும் நிலையையுமே உயர்த்தியுள்ளது! அந்த வீரத் தியாகிகளை அவர் வழி வளர்ந்து வந்துள்ள—தியாகப் பரம்பரையை நாம் மறத்தல் கூடாது. மறக்கவும் முடியாது,

தமிழுக்காக உயிர் தந்தனர், தமிழ்ப் புலமைகூடப் பெறாதார் என்பதை நாம் எண்ணினால் நமது மகத்தான கடமை தெளிவாகத் தெரியும்.

இந்த உணர்ச்சியோடுதான் நேற்றும் இன்றும் பல பெரியார்களின் படங்களைத் திறந்துவைத்துள்ளோம் நாம். மொழியெல்லாம் கடவுள் படைப்பே என்றெண்ணியும், எல்லாம் ஆரியத்தினின்றும் பிறந்தவையே என்றெண்ணியும், ஆராய்ச்சியில் ஈடுபடவும் அஞ்சிக் கிடந்தவர்களுக்கிடையிலே, கிருத்தவ பாதிரியாக வந்திருந்து தமிழினைக் கற்று அதன் அருமையுணர்ந்து, அதன் பெருமையை நிலைநாட்டும் வகையில், பல்லாண்டுகள் பாடுபட்டு ஆராய்ந்தவர் தனிச்செம்மொழியாகவளர்ந்துள்ள தமிழ் ஓர் தனிமொழியேயாகும்; அது ஆரியத்தினின்றும் பிறந்ததுமல்ல, அதன் துணையின்றி இயங்கக் கூடாததுமல்ல என்றகொள்கைகளைநிலைநாட்டி 'திராவிடமொழிகளின்—ஒப்பியன் மொழிநூல்' வரைந்துதவிய -கால்டுவேலரின் படத்தைக் காண்கிறோம் நாம். எங்கிருந்தோவந்தவர்எம்மொழியையோ தாய்மொழியாகக் கொண்ட பாதிரியார் அவர். அவர்செய்ததொண்டைஎண்ணுகிறோம். நன்றி உணர்கிறோம்.

முதன் முதல்—ஆரியத்தினும் தமிழ் உயர்ந்தது என்னும் கருத்தை வெளியிட்டதோடு நாடகத் தமிழ் இலக்கியத்தையும் வரைந்துதவிய பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களுடைய படத்தையும் காண்கிறோம். 'ஆரியம் போல் உலகவழக்கழிந்தொழிந்து, சிதையாவுன் சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே' என்ற தமிழ் வாழ்த்துப் பாடலின் அடிகள் நினைவிற்கு வருகின்றன ஆரியந்தான் உலகவழக்கிலேயே இருந்ததில்லையே? அதனால் தான் அது 'நன்றாகச் செய்யப்பட்டமொழி' என்னும்பொருள் படும்படி—'சமஸ்குருதம்' என்னும் பெயர்பெற்றது? அது உலகவழக்கிழந்தது என்பதேனோ? என்று கேட்டார்—தலைவர் நாவலர் அவர்கள் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் காலம் வடமொழியோடு தமிழை ஒப்பிடவும் அஞ்சியகாலமாகும். ஆரியம் உலக வழக்கில் இல்லை என்று சொல்லவே எவ்வளவு துணிவுதேவைப்பட்டிருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தேவபாஷை செத்து விட்டது—உயிரற்றது என்று கூறினாரே! அது ஒன்றுக்கே நாம் எந்நாளும் அவரை நினைத்தாக வேண்டும்.

சைவத்திருவாளர் ஞானியாரையும் காண்கிறோம். சமயக் கருத்தெல்லாம், வடமொழியிலேயே அமைந்திருந்தபோது, அவற்றைத் தமிழிலேயே எடுத்தெழுதவும், மொழியவும் முன்நின்றார் அவர். அவரது சொற்பொழிவுகளால் 'தமிழ்' சமயக் கருத்தினை விளக்கவும் ஆற்றலுடையது என்ற உண்மை நிலைநாட்டப்பெற்றது.

தமிழ்ப் பேரறிஞர் மறைமலை அடிகளாரின் திருவுருவப்படத்தையும் காண்கிறோம். அதைத் திறந்துவைத்த பாவாணர் அவர்கள், தமிழ்மொழியிலுள்ள சொற்களையெல்லாம் — எப்படி எப்படிவடமொழிச்சொற்களாக மாற்றி கொள்ள முயல்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி தமிழேஉலகின் தாய்மொழி முதன்மொழி என்ற உண்மையையும் தான் நிலைநாட்ட முடியும் என்று கூறினார். மறைமலை அடிகளோ. செந்தமிழ் காத்த சீலர் ஆவார். வடமொழியின் துணையின்றித் தொடர்பின்றித் தமிழை இயங்கவைத்தார். இந்தியை எதிர்த்தார்-தமிழ்நாடுதமிழருக்கே ஆகவேண்டும் என்றார். அவரது சொற்கள் நமது காதுகளில் இன்றும் ஒலிக்கின்றன

தமிழிசை வளர்த்து, தமிழரின் இசைச்செல்வத்தைப் பெருக்கிய, அரசர். அண்ணாமலையார் படமும் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இன்றோ—தமிழிசை அரங்குகளிலும் தெலுங்கு இசைக்கப்படும் அவல நிலையைக் காண்கிறோம். தமிழ்நாட்டில் பிறமொழி இசைகளுக்குச் செல்வாக்களிப்பது — தமிழுக்கு அழிவேயாம்.

அதோ தோன்றுகிறார்—தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள். அவர்களது தொண்டு தமிழ்த்தொண்டு, நாட்டுத்தொண்டு ஏழைகளுக்கு இரங்கும்பணி. தொழிலாளர் பணி. மற்றவர்கள் தமிழை ஆய்ந்தார்கள், அவர் தமிழுடன், மக்களை ஆராய்ந்தார். அவர்களுக்குத் தேவையான கருத்துக்களை, தேவையானமொழியை வளர்த்தார் புலவர்கட்கும், பண்டிதர்கட்குமே உரியதாக்கப்பட்டிருந்த ஒரு மொழியை—அதன் நடையை எளியவர்கட்கும் எச்சிலையினருக்கும் உரியதாக அமைத்துத் தந்தார். தமிழையும் உயர்த்தினார். பொதுமையிலே கனிந்த உள்ளங்கொண்ட அப் பெரியாரும் இறுதியில் கூறினார்—தமிழ்நாடு தமிழருக்கே! எந்நாட்டவருக்கும் அடிமைப் படோம் என்று! அவரது படத்தைத் திறந்து வைத்த டாக்டர் மு. வரதராசனார் கூறினார். 'திரு. வி. க அவர்கள், 'இந்த நாடு விடுதலை அடைந்த பின்பும் இந்நாட்டு மக்கள் அடிமை மனப்பான்மையிலே ஆழ்ந்திக் கிடப்பதைக் கண்டு வருந்தினார்களென்று' அவர்களது கண்ணீர் வீண் போகாது.

ஆனால், மக்களின் மனப்பான்மையிலே உள்ள அடிமைத்தனத்தை ஆராய்ந்தால் ஒருண்மை விளங்கும். அதுதான், இந்நாட்டினின்றும், வெள்ளைக்காரன் வெளியேறினானே தவிர, அடிமைத்தனம் வெளியேறவில்லை. 'ஆதிக்கக்காரா' என்றதொரு தனிவகுப்பு, ஆட்சியாளர்' என்ற நிலையில், அந்நியர் இருந்து கொண்டுதான் வருகின்றனர். அந்நிலையை மாற்றினால்தான் — நம்நாடு — நமதாட்சியில் என்ற நிலை தென்னாட்டிற்குத் தமிழகத்திற்குப் பிறந்தால் தான்—தமிழ் வாழும் நாமும் முன்னேற முடியும்.

இன்றோ- தமிழர்களுக்கு ஏற்பட்டுவரும் இன்னல்களும் துன்பங்களுமோ மிகப்பல. ஆனால் கவனிக்க மறுக்கிறது ஆதிக்க புரி.

சித்தூர் மாவட்டத்திலே சில வட்டாரங்கள் தமிழர்க்குரியன. அதை மீட்கப் போராட்டம்—தேவைப் படுகிறது. நேற்றுப் பிரித்துத் தந்தனர், இன்று போராட வேண்டிய நிலையை உண்டாக்கியுள்ளனர்.

திருவாங்கூரில் உள்ள நாஞ்சில் நாடு தமிழருடையது. ஆனால் அந்த வட்டாரம் தமிழ் நாட்டுடன் இணைவதை எதிர்த்து, அதன் உரிமைக்குப் போராடும் மக்களை அடக்கு முறைக்கொடுமைகளுக்கு ஆளாக்கியுள்ளது அந்தமாநில அரசு மத்திய அரசின் துணைகொண்டு.

பக்கத்திலே, காரையிலும் புதுவையிலும், அந்நிய பிரெஞ்சு ஆதிபத்தியத்தை எதிர்த்துத் தமிழர்கள் உரிமைப் போர் தொடுத்துள்ளனர். நாளும் கொடுமைக்கு ஆளாகின்றனர் ஆனால், அவர்களுக்கு உதவி செய்ய முன் வரவில்லை, இன்றைய ஆட்சிபீடம்.

இலங்கையிலே விரட்டியடிக்கப் படுகின்றனர் தமிழ்ப்பாட்டாளிமக்கள் — திராவிட நாட்டார். அந்நாட்டு அமைச்சர்களுடன் விருந்துண்டு மகிழ்வதைத் தவிர—நமது மக்களின் உரிமையைக்காக்க முனையவில்லை 'டில்லி' ஆட்சியாளர்.

இதே சமயத்தில வடநாட்டு அகதிகளுக்குத் துன்பம் என்றாலோ காஷ்மீர் மக்களுக்கு வேதனை என்றாலோ, செய்தி காதிலே விழுமுன் ஓடோடி உதவுகிறது இந்த ஆட்சி. எனவே தான் இந்த நாட்டில் வாழும் மக்கள் புறக்கணிக்கப்படும் நிலையில் உள்ளவரையில், சம உரிமைக்கு வழிகாணவேண்டுமானால் நாடு பிரியவேண்டும் என்று கூறினார்—திரு. வி. க. அவர்களும்.

இந்நிலையில்—தமிழ் மொழி பயிலும் மக்களுங்கூட, இலக்கிய மொழி—(Classical Language) என்பதற்காக வடமொழி பயில வேண்டும் என்று பேசிவருகிறார்கள் சில பிராமணோத்தமர்கள். தமிழ் மொழி இலக்கியமொழி அல்லாதது போலவும் பண்டை இலக்கண இலக்கியங்களைப் பெறாதது போலவும், அதற்குத் துணையாக — வடமொழிதேவை என்பது போலவும் பேசுகிறார்கள். தமிழ் நிலத்தில் பிறிதொரு மொழியை 'இலக்கிய மொழி' என்பதற்காகப் பயில வேண்டும் என்று பேசுவதே தமிழை இழிவுபடுத்தும் துரோகச் செயலாகும்.

நேற்று முன்னாள் பேசிய உள்நாட்டு அமைச்சர் கைலாசநாத கட்ஜூ அவர்களோ, அதைவிட விசித்திரமாகப் பேசியுள்ளார்: "இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளுக்குமே — சமஸ்கிருதமே தாய்மொழியாகும் என்றும், எனவே—இந்திக்குப்பதில் அதையே தேசியமொழி ஆக்கிவிட்டால், எல்லா பகுதிகளிலும் தேசிய மொழி எளிதில் பரவிவிடும்" என்றும் அவர் கருதுகிறாராம். எத்தகைய நெஞ்சத்துணிவிருந்தால், இவ்வாறு மொழியக்கூடும், ஓர் அமைச்சர் என்று எண்ணிப்பாருங்கள். இன்று தேசியமொழி என்று வழங்கப்படும் இந்த தேசிய மொழியும் ஆகாது, நிலைக்கவும் முடியாது அழிவதும் உறுதியே என்ற நிலையில் வடமொழி தேசியமொழியா

சென்றோம் - வென்றோம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது யாங்ஙனம்? சாக இருக்கின்ற 'தேசியமொழி' பதவிக்குச் செத்துப்போன மொழிதான் அதிக தகுதியுடையது போலும்.

மற்றும்—நம்நாட்டு வரலாறும் தென்னாட்டை அடிப்படையாக வைத்து வரையப்படவேண்டும் என்றார், மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை. இருந்தால்—நமது பழம்பெருமையும் புகழும் நமக்குத் துணைசெய்திருக்கும் சேரன் செங்குட்டுவன் பெற்ற வெற்றி, இமயம் வென்ற கரிகாலனின் புகழ்—கங்கைகொண்ட சோழனின் மாண்பு — ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியனின் ஆற்றல் – நமது பரம்பரையினருக்கு எழுச்சியூட்டி இருக்கும். ஆனல்—வடவரின் வரலாற்றை நமது வரலாறு என்று எண்ணி மயங்கியதால்தான், செங்கிஸ்கான் வந்தான், அலெக்ஸாண்டர் வந்தான், கோரிவந்தான் கஜினிவந்தான், ஆப்கானியர்கள் வந்தார்கள், மங்கோலியர் வந்தார்கள், பிரஞ்சுக்காரர் வந்தார், டச்சுக்காரர் வந்தார், போர்ச்சுகீசியர் வந்தார், ஆங்கிலேயர்வந்தார் என்று, வந்தோர்களின் வரலாற்றையே படித்து மான உணர்ச்சி குன்றியவர்களானோம். சென்றோம், வென்றோம், வாகை சூடினோம், வாழவிட்டோம், என்ற எழுச்சி மிக்க செய்திகளை இழந்தோம் எனவே தான்—இந்நாள் நாம் நமது வரலாற்றைப் புதுப்பிக்க, முக்கியத்துவம் பெறச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் பேசுகையில், தனித் தமிழ் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தி, ஊர்ப்பெயர்களைத் தமிழ்ப் படுத்த வேண்டியதை எடுத்துக் காட்டி, தமிழர்கள்-தங்கள் பெயரைத் தனித் தமிழாகவே அமைத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை வலியுறுத்தி-பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், தமிழுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு, தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்,

இங்கு திறக்கப்பட்ட-பெருமக்களின் படங்களைத் தவிர-இன்னும் பலரது படங்களும் திறக்கப்பட வேண்டுமென்றும், அவற்றிற்கெல்லாம்-காலமும் — பொருளும் இடந்தராவிடினும் அவர்களின் தொண்டினை யெல்லாம்நமது உள்ளத்தில்கொண்டு அவ்வழி நடக்க வேண்டுமென்றும் கூறினர்.

அவர்கள் அனைவரையும் ஒரே வடிவில் காண்பதனல், அவர்கள் அனைவருக்கும் வழிகாட்டியான-திருவள்ளுவரையே உள்ளத்தில் கொண்டு அவரது நெறியையே நாடெங்கும் பரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திருக்குறள் உரைவளத்தைப் பாராட்டிப் பேசிய ஓரறிஞர், இடையிலே கூறினர், திருக்குறளை—தி. க.—தி. மு. க. கூட ஒப்புக் கொள்கின்றன என்று.

உண்மைதான்! ஆனல் தி. க., தி, மு, க. க்கள் திருக்குறளை மட்டுந்தான் ஒப்புக் கொள்கின்றன. வேத சாஸ்திர இதிகாச புராணங்களை தி. க. தி. மு, க. ஒப்புக் கொள்ளவில்லை, கம்ப இராமாயண பெரியபுராணத்தை கண்டிக்கின்றன. கருத்தற்றவை என்பதால் ஏற்கவில்லை. கீதையைக்கண்டிக்கின்றனர் குரானை ஒப்புக் கொள்ளவில்லை. பைபிளை ஏற்கவில்லை. ஆனல் தி க, தி மு க வினர்—திருக்குறளை மட்டுந்தான் ஏற்றுள்ளனர், அதுதான் அதற்குள்ள தனி மதிப்பு. அதை ஏற்றுக்கொண்டிருப்பதொன்றே தி க தி மு க வினருடைய பெருமையையும் பலப்படுத்தும்.

மற்றவர்களைப் போல் கண்ட கற்பனைகளையும் மூடக் கொள்கைகளையும் ஏற்பவர்களல்லர் பகுத்தறிவுப் பண்பினர். அதே போல் எவ்வளவுதான் சிறப்போடு பூஜிக்கப்படும் ஏடுகளாயினும் தி க தி மு க வினர் ஏற்கும் சிறப்பில்லாத ஏடுகள்எதிர்காலத்தில் நிலைக்காது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்,

இறுதியாக நமது தமிழ் நெறியைத் தளரவிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஒன்றே குலமும்—ஒருவனே தேவனும்—என்ற பொன்னெறி சிறக்க—இனத்தால், மொழியால், கலையால் பண்பாட்டால் ஒன்றுபட—வள்ளுவர் வழியில் நாம் ஒழுக வேண்டும்,

மாநாட்டினர் தீர்மானித்திருப்பது ஜுலை இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமாகக் கொண்டு அதில் நாம் நாடெங்கும் வள்ளுவர் விழா நடைபெறச் செய்ய வேண்டும்.

வள்ளுவர் விழா எடுப்போம், பகுத்தறிவுப் பண் பாடுவோம், தமிழர் உரிமையைக் காத்திடுவோம், என்று உறுதி நம்மிடத்திலே ஓங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், என்று கூறி, தலைவர் நாவலரவர்களுக்கும், அவை யோருக்கும் நன்றி கூறி—பலத்த கைதட்டலுக்கிடையே தமது பேருரையை முடித்தார்.

நமது முழக்கம்

காங்கய நல்லூர் :—17-7-54 சனி மாலை நடைபெறும் தி. மு. கழக பொதுக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை, மும்முனைப் போராட்ட முழக்க நாள் 18—7—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு பெரியமெட்டு தி. மு. கழகக் கட்டடத்தில் தோழர் சு. பாலன் [17-வது வட்டப் பொருளாளர்] தலைமையில் நடைபெறும்.

திக்கெட்டும் வெற்றி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டத்திலே குறிப்பிடத்தக்கதொரு நாளாகும். அந்த நாள் நம்மையும் நம் கழகத்தைப்பற்றியும், அலட்சியமும் அர்த்தமற்றவின் சந்தேகங்களும் கொண்டிருந்த பலரது கண்களைத் திறந்துவிட்ட நாள், நாடு முழுதும் நாட்டை ஆண்டிடும் ஆளவந்தார்களும், அகில உலகும் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ளும்படி செய்த நாள். தியாகத் திருநாள். வெற்றி விழா நாள்! அந்த நாளைத்தான் இன்று நாம் நினைவூட்டி அன்று நாம் செய்த தியாகங்களை நினைவு படுத்தி நாம் செய்த கடமைகளைக்கணக்கிட்டு கொண்ட கண்ணியத்தை எண்ணிப்பார்த்து, பட்ட இன்னல்களையும் அவற்றையெல்லாம் நாம் சகித்த விதங்களையும் அதனல் திராவிடம் பெற்ற நல்ல நன்மைகளையும், வெற்றிகளையும் எண்ணிப் பூரித்துப் பெருமிதமடைந்து வெற்றி விழாக்கொண்டாடுகிறோம்! வீரப்பண் பாடுகிறோம். போராட்ட வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறோம்.

அறப்போரில் ஈடுபட்டு தாய் தந்தையரை மறந்து, உற்றாரைத் துறந்து, அண்ணன் தம்பிமார்களை—ஆசை மனைவி மக்களை—பிரிய நண்பர்களைப் பிரிந்து கடுஞ்சிறை புகுந்துகஷ்டநஷ்டங்களையேற்ற திராவிடத்தோழர்களை நாம் பாராட்டுகிறோம் போரில் தடியடிபட்டும், கைகால் உடைபட்டும், மண்டை பிளந்தும் அவதியுற்ற தோழர்களின் வீரத்தைத் திராவிடம் மீண்டும் நினைந்துமகிழ்கின்றது. ஜுலை பதினைந்தில் கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் திராவிடத்தின் மானத்தைக் காத்திடத் தமது உயிரையே ஆணவ ஆச்சாரியாரின் ஆட்சியின் துப்பாக்கிக்குண்டுகட்குப் பலியிட்டு, பணயமாகத்தந்து செத்து மடிந்த ஆறு வீரத்திராவிடரின் தியாகத்தை எண்ணிக் கண்ணீர் வடித்து, அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறது, திராவிடம்.

கடந்த ஆண்டு தி. மு, கழகம் இத்தகைய மாபெரும் மூன்று அறப்போராட்டங்களில் ஈடுபட்டு எண்ணற்ற இன்னல்களை ஏற்று, அடக்குமுறைக்கொடுமைகளைச் சகித்து, வெற்றிகண்டது அந்த வெற்றிகளைக் கொண்டாடும் நாள் தான் "ஜுலை பதினைந்து"

கடந்த ஆண்டு நாம் மும்முனைகளில் போராடினோம், மூன்று வேறு பிரச்சினைகளுக்காக ஒரே நேரத்தில் அறப்போர் தொடுத்தோம். மகத்தான தியாகங்கள் செய்து வெற்றியுங் கண்டோம்,

முதலாவதாக அன்று நாட்டின் முதலமைச்சராக விளங்கிய ஆச்சாரியார் திராவிடக் குழந்தைகளின் மீது கட்டாயமாகத் திணித்த குலதாம கல்வித் திட்டத்தைக் கைவிடப் பலமுறை கேட்டும் அதன் தீங்குகளைப் பல பேடைகளில் எடுத்துக் கூறியும் கை விடாத காரணத்தால் கல்வித் திட்டப் போராட்டம் நடத்தினோம்.

ஆட்சி இருக்கிறது, கல்கிப் பத்திரிகையில் பிரசார பலம் இருக்கிறது என்ற ஆணவத்தால் அடக்குமுறை அம்புகளை வீசி ஆணவ விளையாட்டுகளை விளையாடி கல்வி திட்டப் போரினை ஆச்சாரியார் அடக்கிவிட எண்ணினர். ஏமாந்தார். இன்று அவரும் மாஜியானர், அவரது கல்வி திட்டமும் இருந்த இடமே தெரியாது போய் விட்டது.

இரண்டாவதாக தமிழகத்தின் அவமானச் சின்னமாக, வடநாட்டு ஆதிக்கத்தின் எடுத்துக் காட்டாக, தமிழகத்தின்கேட்டிலுக்கே நடைமுறை உதாரணமாக வடநாட்டு முதலாளியான டால்மியாவின் பெயரால் விளங்கிவந்த டால்புயாபுரம் என்பதை கல்லக்குடி என மாற்றியமைக்கவேண்டும் என்ற திராவிடத்தின் ஒருமித்த வேண்டுதலை ஆளவந்தார்கள் அலட்சியம் செய்த காரணத்தால் டால்மியாபுரம் புகைவண்டி நிலயத்தில் கல்லக்குடி என்ற தாளினை ஒட்டும் அறப் போராட்டத்தினைக் கலைஞர் கருணாநிதி தலைமையில், நடந்த ஜுலை பதினைந்தில் துவக்கினோம்.

கல்லக்குடி போராட்டத்திலும், சிறைத்தண்டனையும், தடியடிக் காயங்களும், பெற்ற தோழர்கள் பலர் கருணாநிதி-ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையடைந்தார் இரண்டுதோழர்கள் தமது உயிரையே தியாகம் செய்தார்கள்.

அதேநேரத்தில் தமிழரது தன் மானப் போராட்டத்தை 'முட்டாள்தனம்' நான்சென்ஸ் என்று இழிமொழியால் கேலி பேசிய பண்டித நேருவுக்குக் கண்டனம் தெரிவிப்பதற்காக, ஜுலை பதினைந்தாம் நாள் தமிழகமெங்கும் ரயில் நிறுத்தம் செய்யும்படி கழகம் ஆணையிட்டது. இதனை அண்ணா முதன்முதல் சிதம்பரம் மாநாட்டில்தெரிவித்தார் இந்தப் போரில் ஈடுபட்டு ஐயாயிரம் தோழர்கட்கு மேல் சிறைத் தண்டனை பெற்றனர், இப்போரில் தூத்துக்குடி தோழர்கள் நால்வர் மாண்டனர்,

மூன்று முனைகளில் நடத்தப் பட்ட அறப்போர் மகத்தான வெற்றிகளைப் பெற்றுத் தந்தது. அந்த வெற்றி விழாவினைத்தான் இன்று நாம் இங்கேகொண்டாடுகிறோம்.

(தொடர்ச்சி நாளை வரும்)

திருமணம்

சென்னை எழும்பூர் மீனும் பாள்நகர் தாழ்த்தப் பட்டோர் சமூக நலவுரிமைச் சங்கத்தின் சார்பில், சென்னை 33-வது வட்ட நகராண்மைக்கழக உறுப்பினரும் தழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தலை சிறந்த கவிஞரில் ஒருவருமான திரு. கே. மாணிக்கவாசகனர் அவர்கள் தலைமையில் மணமகன் திரு. சி. கணேசனுக்கும் மணமகள் திருமதி ஆர். பத்மாவதியம்மைக்கும் மணமகன் திரு எம். ரத்தினத்திற்கும் மணமகள் திருமதி எம். பட்டம்மாளுக்கும் 11-7-54 அன்று சீர்திருத்த முறையில் வெகு சிறப்பாக திருமணம் நடந்தேறியது, இதன் ஞாபகார்த்தமாக மாலைமணி பத்திரிகைக்கு ரூ. 1-0-0 அன்பளிப்பு அளிக்கப்பட்டது.

திருப்பதி, எம். ராஜம் அவர்களுக்குச் சொந்தமான போர்ன்ஸ்டல் அச்சகத்தில் திரு. டி. ப. சுப்பிரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2-45, மூத்து பார்ச்செட்டித்தெரு, சென்னை-1-ல் வெளியிடப்பட்டது.